மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசவிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். உங்களுக்கும் மாற்றுக் கருத்து இருக்கிறதா? திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 12 ஆம் தேதி அன்று தண்ணீர் திறப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. (குறுக்கீடுகள்) அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையாக இருங்கள், பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், அவர்கள் வெளி நடப்புச் செய்கிறோம் என்று சொல்வது, அவர்கள் உரிமை. அதில் நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

5. மேட்டூர் அணையிலிருந்து உரிய காலத்தில் தண்ணீர் திறக்க இயலாத சூழ்நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்,

காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தலைவர் அவர்களும் இங்கே காவேரியிலே ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க இயலாது என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று செல்கிறார்கள். நான் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 1988-1989-ல் அவர்கள் உரிய காலத்தில் தண்ணீர் திறக்கவில்லை. ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 7-8-1988 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 1989-1990-லும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அப்போதும், ஜூன் 12 ஆம் தேதி குறுவை சாகுபடி செய்வதற்காக, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 20-8-1989 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகம் 1996-1997 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது, தண்ணீர் திறக்கப்பட்ட தேதி 26-7-1996. அப்போதும், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, 1999 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்த காலக்கட்டத்திலும், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 1-7-1999 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல், 2005-2006 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, ஜூன் 12 ஆம் தேதி குறுவை சாகுபடிக்காக, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 4-8-2005 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அப்போதும், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 18-7-2007 அன்றுதான் தண்ணீர் திறந்தார்கள். 2009-2010 ஆம் ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அப்போதும், ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28-7-2009 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. 2010-2011 ஆம் ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அப்போதும், ஜூன் 12 ஆம் தேதி, குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28-7-2010 அன்றுதான் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்ததாக வரலாறே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அது தெளிவாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தண்ணீர் அணையில்

இருந்தால்தானே திறக்க முடியும்? அது காங்கிரஸ் கட்சித் தலைவருக்குத் தெரியும். ஏனென்றால், அவர் ஒரு விவசாயி. ஆக, பருவமழை நன்றாகப் பெய்தால்தான் நீர்வரத்து அதிகமாக இருக்கும். அப்படி இருந்தால்தான் மேட்டூர் அணையிலும் நீர் இருப்பு அதிகமாக இருக்கும். நீர் இருப்பு இருந்தால் தண்ணீர் திறக்கப்படும். குறைந்தபட்சம், 90 அடி அளவிற்கு அணையில் தண்ணீர் இருந்தால்தான் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிட முடியும். அதற்குக் குறைவாக இருந்தால், சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்துவிடும். விவசாயிகள் நஷ்டத்திற்கு உட்படுகிறார்கள். ஆகவே, உரிய காலத்தில் தண்ணீர் திறக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். ஆனால், அணையில் போதுமான அளவிற்கு தண்ணீர் இல்லை. பருவமழை பொய்த்ததன் காரணமாக, அணையில் குறைவான நீர் இருக்கின்ற காரணத்தினால், சாகுபடிக்காக தண்ணீர் திறக்க இயலவில்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு விவசாயிகளினுடைய நலன் காக்கின்ற அரசாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், ஒரு குறுவை தொகுப்புத் திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கிறது. கடந்த காலத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, நீர் இல்லாமல் இருந்தாலும்கூட, இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்ய வேண்டுமென்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற நீரை, குறைந்த அளவாக இருந்தாலும், பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டுமென்பதற்காக அம்மா அவர்களுடைய அரசு, குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்து, அதற்காக 115 கோடி ரூபாயை அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் நான் அதையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டினேன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால், குறுவை சாகுபடிக்காக ஒவ்வோர் ஆண்டும் 3 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர்தான் அந்த season-ல், பருவ காலத்தில் தண்ணீர் திறந்து விடும்போது, வேளாண் பெருமக்கள் பயிர் சாகுபடி செய்வார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, குறுவை தொகுப்புத் திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்து, விவசாயிகளுக்கு இந்த நிதியை வழங்குகின்ற காரணத்தினால், சுமார் 3 இலட்சம் ஏக்கர் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாசனப் பரப்பு குறையாமல், வேளாண் பெருமக்கள் சாகுபடி செய்கின்ற ஒரு சூழ்நிலையை, இன்றைக்கு

அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எந்த வகையிலும் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதிலே அக்கறை உள்ள அரசு, அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) அவையின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் உரிய காலத்தில் திறக்கவில்லை என்று இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நீங்களும் வெளிநடப்புச் செய்திருக்கின்றீர்கள். நன்றாகச் சிந்திக்க வேண்டும். அதாவது, குறுவை சாகுபடி 3 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர்தான் செய்கிறோம். ஆனால், அம்மா அவர்களுடைய அரசு அங்கேயிருக்கின்ற நிலத்தடி நீரை விவசாயிகள் முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக இன்றைக்கு குறுவை தொகுப்புத் திட்டத்தின் மூலமாக நிதியுதவி அளித்து, அதே அளவிற்கு நெல் மற்றும் பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு விவசாயிகளுக்குத் தேவையான, வேளாண் பெருங்குடி மக்களுக்குத் தேவையான உதவிகளை அம்மா அவர்களுடைய அரசு செய்து கொண்டிருக்கின்றது. ஆகவே, குறுவை சாகுபடி செய்வதற்கும், பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கும் தேவையான நிதியை குறுவை தொகுப்புத் திட்டத்தின் வாயிலாக நிதியுதவி செய்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்; விவசாயிகளுடைய நிலை உயர வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட அரசு, அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்தாலும் அவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி என்கிற*

வார்த்தையை மட்டும் சொல்லி (குறுக்கீடு) மாவட்டத்தின் சார்பாக நன்றி மட்டும் சொல்லுங்கள். விவாதம் வேண்டாம்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, 2011 ஆம் ஆண்டுதான் ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்பு (மேசையைத் தட்டும் ஒலி) 6 ஆம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல, 2001-2002-ல் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 12-6-2001-ல், ஜூன் 12 ஆம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, தண்ணீர் இருக்கின்ற காலத்தில் எல்லாம் உரிய காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தண்ணீரைத் திறந்திருக்கின்றது. தண்ணீர் அணையிலே குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, பருவமழை சரியாகப் பெய்யாத காரணத்தினாலே, மேட்டூர் அணையிலே நீரின் இருப்பு போதிய அளவு இல்லாத சூழ்நிலையின் காரணமாகத்தான் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இருந்தாலும், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, குறுவை தொகுப்புத் திட்டத்தின் வாயிலாக நிதி உதவி செய்து, எந்த அளவிற்கு--ஏற்கெனவே 3,15,000 ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அதற்குக் குறையாத அளவிற்கு, வேளாண் பணிகளைச் செய்வதற்கு வேளாண் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

4. டெல்டா மாவட்டங்களின் குறுவை நெல் சாகுபடிக்காக தொகுப்புத் திட்டம் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*